27245


**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 140 Jaffna, Friday, 5th September, 1980 No. 36

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*
The Manager, 'Morning Star', Vaddukoddai.


## Syndicated Loan for Local Hotel Project

*Hotel Lanka Oberoi* will have a total of 580 rooms when Stage III of the Project is completed in 1981. The American Express Bank and the National Development Bank have committed themselves to a Rs. 125 million loan for stage three of the Hotel Lanka Oberoi Extension Project.

The American Express Bank will contribute 65 million rupees while NDB will contribute 60 million rupees. But the total cost of the Project is 135 million rupees.

The balance of 10 million rupees will be met by the owning company, Asian Hotels Corporation. The new ten floor wing, now under construction will cover an area of 200,000 square feet.

This is the first time a foreign bank has contributed towards a syndicated project.

## A Service of Thanksgiving

A Service of Thanksgiving for the life and work of Mr. K. E. Mathiaparanam, formerly of the Staff of Jaffna College, Vaddukoddai was held at the Assembly of God Church at Kollupitiya recently.

Rev. Elphage Fernando officiated at the Service. Rev. Jacob J. Perera preached the Sermon.

There were two tributes, one of which was by Rev. S. S. Arulampalam of the Colombo Church of the JDCSI.

In their tributes, the speakers mentioned that Mr. Mathiaparanam left behind him a rich legacy to his students. His sense of stewardship of Time (he was mindful of every minute that God gave him), his benign influence over those whom he shepherded and, above all, his mission in life to bring peace and reconciliation where there was disharmony and strife, were a shining witness to a life lived close to His Master.

A devotional Lyric and some special songs were sung by members of the family.

The Service ended with Prayer and Benediction by Rev. Elphage Fernando.

*India*

## "Disturbed Areas"

The Tamil Nadu Chief Minister, Mr. M. G. Ramachandran, has expressed himself strongly against the Centre's move to take powers to declare an area in a state as "disturbed area" and constitute special courts to ensure speedy trial of cases relating to incidents in that area.

Such attempts said the Chief Minister were not in keeping with Parliamentary Democracy. The State Government represented and spoke on behalf of the people and not on behalf the ruling party.

## Weddings

*Colombo Church*

### Thurairatnam — Thomas

The Dutch Reformed Church, Wellawatte was the scene of a beautiful wedding on Saturday 26-7-80 when Dr. Thomas Ponnarusu Thurairatnam, the son of Mrs. Thavamany Thurairatnam and of the late Mr. J. P. Thurairatnam, led to the altar Dr. (Miss) Ray Anna Thomas, youngest daughter of the Dr. & Mrs. K. N. Thomas of Ananda Madam, Kumbanad, Kerala, India.

The Rev. S. S. Arulampalam officiated, assisted by Rev. K. S. Jeyasingam who preached the homily.

A special song based on the 128th psalm was composed and sung by Mr. T. Vipulanandamurthy. The family choir rendered an anthem in English.

The bridegroom is a grandson of the late Rev. G. D. Thomas and Mrs. Thomas of the JDCSI and of the late Mr. & Mrs. L. S. Ponniah of Atchuvely.

*Chavakachcheri Church*

### Gunasingham—Rajendran

Mr. Vilvarajan Gunasingham, Engineer of Rank Xerox, U. K. led to the Altar Miss Rohini Rajendran on Saturday the 6th of September at 4-00 p. m. The wedding took place at the J. D., C. S. I. Church, Chavakachcheri. The bridegroom is the son of the late Mr. V. Gunasingham and Mrs. Pushpam Gunasingham of Chavakachcheri. The bride is the daughter of Mr. & Mrs. R. Rajendran also of Chavakachcheri. The marriage was solemnized by the Rt. Rev. D. J. Ambalavanar, an uncle of the groom, assisted by the Rev. S. N. Sugunananthan. The Rev. J. J. Ratnarajah preached the homily.

*IN BRIEF*

O *Parcels Racket.* Millions of rupees worth of gift parcels from overseas are reported to find their way to "World Market", in Duke Street, Colombo. Certain businessmen are said to import items as expensive clothing and ready-made garments under the guise of gifts to beat the country's import control regulations.

O *Pope John Paul II* may visit Sri Lanka at the end of the year, according to informed sources.

O *The Seventh Assembly of the CCA* has been fixed for May 18—28, 1981 at Bangalore. The Executive Committee which met to plan the Assembly met in March at Belair in South Australia. A series of Niles Memorial Lectures will be a feature of the Assembly. The search for an Associate General Secretary of the CCA has not yet been successful. The CCA Secretary is Mr. Frans Tomiwa.

*Erlalai North Church*

### Reception to Mr. & Mrs. Nesan Kadirgamar

Erialai North Church accorded a Reception to their Worker, Mr. Nesan Kadirgamar on 30-8-80 when he returned to the Parish with his new wife, after their marriage on 21-8-80 at the Uduvil Church.

Members of the Youth League garlanded the new couple. At a meeting, presided over by Mr. V. Nagaratnam, the speakers who represented the Church—Mr. J. A. Senathirajah, Mrs. Lily Anandarajah and the Chairman, offered their blessings to the young Pastor and his wife, as they commenced their Ministry in their midst. They congratulated the Pastor, in particular, for having chosen as his wife, a non-working partner.

Mr. K. I. Thevathason, a Senior Member of the Church made a presentation.

The Pastor thanked the congregation for the 'surprise' they had arranged for him and his wife. This was the third occasion on which they had welcomed him and he and his wife greatly appreciated their gesture. Both of them, the Pastor said, would try to live up to the expectations of the parishioners.

Mr. C. Vimalanathan proposed a Vote of Thanks.

*IN BRIEF*

O *An International Medical College* is to be set up in Sri Lanka at a cost of Eight hundred Million Rupees. The College will study ancient medical systems in Asia and other regions with a view to developing those systems. *"Medicine of Holland"* will finance the setting up of this college.

O *The Schools Principals' Association* of the Northern Province has brought to the notice of the Ministry of Education that *158 schools* in the North did not have Principals or Deputies. Those now in charge of these schools are in the "Performing" category.

## IN MEMORIAM

In Everloving Memory of

**Emily Pavalam Arnold**

Called to rest
17th September, 1978

"*Precious for ever are memories of you,*
*In silence and prayer we remember you.*"

Fondly remembered and sadly missed by your husband and loved ones in Sri Lanka and abroad.

Dehiwela.

## WANTED

**A Director for the Engineering Section of the Jaffna College Technical Institute as from 1st January, 1981**

Qualifications:
Senior Engineer with educational experience.

Salary Scale:
Rs. 1,500 — Rs. 2,500
4 x 50 ; 8 x 75
with all government approved allowances, married and professional allowances. A point on the approved salary scale is negotiable depending on qualifications and experience.

Other details may be obtained from the undersigned.

Applications may be made on forms available in my office on or before Saturday the 20th September, 1980

A. Kadirgamar,
Hony. Secretary
Jaffna College Technical & Agricultural Institute.

Principal's Office,
Jaffna College,
Vaddukoddai.

## "JAFFNA — 1980"

(Sri Lanka)

By

**Dr. W. R. Holmes**

The Book is now available for sale.

Price:
Rs. 40/-; US $ 6; £ 3; Malaysian $ 10.

The CISRS., Ashram, Chunnakam.
Jaffna College Vaddukoddai.
C. L. S. Book Shop, Jaffna.

C. I. S. R. S.,
Christa Seva Ashram,
Maruthanamadam,
Chunnakam.

## IN MEMORIAM

In Loving Memory of

**P. THAMBYRAJAH**

of Manipay.
Born 30th July, 1889
Departed to Glory
11th September, 1979

Deep in our hearts you will always stay, loved remembered every day.

One year seems yesterday, we miss you dear Papa even today. We know that you are safe in the arms of Jesus.

*Affectionately remembered by his loved ones.*

3, Old Park Road,
Chundikuli.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

## தாரகை ஒளி

கற்றவர்களைக் கற்றவர்களே விரும்புவார்கள். மூர்க்கரை மூர்க்கர் விரும்புவார்கள். நல்ல தாமரைக் குளத்தை அன்னப்பட்சி நாடும். சுடுகாட்டிலே பிணத்தைக் காகம் நாடும். — மூதுரை.

மலர் 140 ] 5 — 9 — 1980 [ இதழ் 36

## தவத்திரு தனிநாயக அடிகள்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

என்ற திருமூலர் பாடலுடன் 1951-ம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் தமது சொற்பொழிவை ஆரம்பித்தார் தனிநாயக அடிகள். அவ்விழாவுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, அவருடைய பேச்சைக் கேட்டு மெய்ம் மறந்து, "இது தனிநாயம் அல்லவா? இதற்கு ஒரு சபாநாயகம் வேண்டுமா?" என்று குறிப்பிட்டார்.

தவத்திரு தனிநாயக அடிகளின் வாழ்க்கை முழுவதும் திருமூலரின் பொன்மொழியையே இலட்சியமாகக் கொண்டு விளங்கியது என்பதனை அவருடைய எதிரிகள் கூட ஏற்றுக்கொள்வார்கள். சென்ற செவ்வாய்க்கிழமை தமது அறுபத்தியேழாவது வயதில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்ட அடிகள் தமிழுக்குச் செய்த தொண்டுகள் அனேகம். பதினைந்து மொழிகளை நன்கு கற்று, முப்பது மொழிகளில் பரிச்சயம் பெற்றிருந்த அடிகள் தமது பன்மொழிப்புலமையினால், தமிழின் பெருமையை உலகுக்கு அறிவித்தார். அவருடைய "தமிழ்த்தூதினால்" உலகத்திலே பல பல்கலைக்கழகங்களில் தமிழ் போதிக்கப்பட்டது. அதுவரை காலமும் மேலைத்தேய பல்கலைக்கழகங்களில் "சமஸ்கிருதமே" முக்கிய இந்திய மொழியாகப் போதிக்கப்பட்டு வந்தது. அடிகளின் தொண்டினால் சமஸ்கிருதத்தின் இடத்தினைத் தமிழ் வென்றெடுத்தது.

பண்டைத் தமிழரசர் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர். இருபதாம் நூற்றாண்டில், உலகளாவிய தமிழ்ச் சங்கம் அமைவதற்கு வழிகோலியவர் தனிநாயக அடிகள். 1964-ல் புதுடில்லியில் இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. 1966-ல் முதலாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றது. இந்த மகாநாடு தனிநாயக அடிகளின் பெருமையை உலகம் முழுவதற்கும் அறிவித்தது. 1968-ல் சென்னையிலும், 1971-ல் பாரிசிலும், 1974-ல் யாழ்ப்பாணத்திலும் இந்த மகாநாடுகள் நடைபெற்றன. 1981-ல் இந்த மகாநாடு மதுரையில் நடைபெறவிருக்கிறது.

தனிநாயக அடிகள் உண்மையான தமிழ் அன்பர். ஈழத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்குக் குழிபறிக்கப்படும்போதெல்லாம் அதனை எதிர்த்து நின்ற அணிகளுடன் இணைந்து போராடினார். 1956-ம் ஆண்டு காலிமுகச் சத்தியாக்கிரகம் முதல் 1980-ல் அவர் இறக்கும் வரை தமிழ் மக்களின் போராட்டங்களில் ஈடுபட்டு உழைத்திருக்கின்றார்.

அடிகள் தமிழறிஞர் மட்டுமல்லர், அவர் இறையியல் அறிஞர். கல்வித்துறை நிபுணர். ஆனால் தமிழ்மீது அவர் தணியாத காதல் கொண்டு வாழ்ந்தார்.

தமிழ் மக்கள் அவர் செய்த தமிழ்த்தொண்டை ஒரு பொழுதும் மறக்கமாட்டார்கள். "தனிநாயகம் இருபதாம் நூற்றாண்டுத் தமிழுலகின் தனிநாயகன்" என்று வருங்கால வரலாற்றாசிரியர்கள் அவரைப் போற்றுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

---

### சீனாவில் 47,000 பிள்ளைகள் தினசரி பிறக்கின்றன

சீனாவில் தினசரி 47,000 பிள்ளைகள் பிறக்கின்றன. பத்து வருடத்துக்கு முன்னர் இது 28,000 ஆல் அதிகரித்திருந்ததென்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்பக் கட்டுப்பாட்டு முறையினாலேயே இவ்வாறு குறைந்துள்ளது எனத் தெரியவருகிறது.

### கோபுரம் சஞ்சிகை

இந்து கலாச்சார அமைச்சு "கோபுரம்" என்ற பெயரைக் கொண்ட இந்து மாத சஞ்சிகையொன்றை அடுத்த மாதம் முதல் வெளியிடத் தீர்மானித்துள்ளது. இதனைப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை வெளியிட்டு வைப்பார்.

### சம்பள உயர்வு

உப தபால் அதிபர்களுக்குரிய சம்பளமும், உப தபால் நிலையங்களுக்குரிய வாடகைப் பணமும் அடுத்தாண்டு முதல் அதிகரிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

### வேலை நிறுத்தம்

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. நுகர்ச்சிப் பகுதி ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (2 இலைகள் உட்பட) வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். ஜூலை மாத சம்பளம் வழங்கப்படாமை, வருடாந்த சம்பள உயர்வு வழங்காமை, அனுமதியின்றிப் பணக்கழிப்பு ஆகியவற்றை எதிர்த்தே மேற்படி வேலை நிறுத்தத்தில் அவர்கள் இறங்கியதாகத் தெரியவருகிறது.

## பழைய ஏற்பாட்டில் உள்ளுந்துதலும் வெளிப்படுத்தலும்

பழைய ஏற்பாட்டை நன்கு ஆராயும் அறிஞர்கள் அதில் பொதிந்துள்ள சிறந்த தெய்வீகக் கருத்துக்களையும், அடிப்படைக் கருத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டு பழைய ஏற்பாட்டின் அதிகாரம் இறைவெளிப்பாட்டினாலும் ஆவியானவரின் உள்ளுந்துதலினாலும் ஏற்பட்டதென்பர். இறைவெளிப்பாடு பழைய ஏற்பாடு முழுவதிலும் வியாபித்து இருப்பதனைக் காணலாம். வெளிப்படுத்தல் என்னும் பதம் Apokalupsis என்னும் கிரேக்க பதத்தின் மொழிபெயர்ப்பாகும். Apokalupsis என்னும் கிரேக்க பதத்திற்கு மறைவு நீக்கல், மறைவு நீக்கி வெளியாக்கல், ஒளிப்பிடத்தினின்று வெளிக்கொண்டு வரல் என்பவை பொருளாகும். மனிதனின் சொந்த முயற்சியினால் அறிந்து கொள்ளப்பட முடியாதவராக விருக்கும் கடவுள் தனித்தனி நிகழ்ச்சிகளினாலும், வரலாற்றுக்கூடாகவும் தம்மை வெளிப்படுத்தினார். எனவே பழைய ஏற்பாடு கடவுள் தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தின சரிதை என்று அறிஞர்கள் கூறுவர். இதனைப் போலவே பழைய ஏற்பாடு கடவுளின் உள்ளுந்துதலைப் பெற்ற அடியார்களின் நூல் என்றும் கூறப்படும். அடியார்களின் மனதை, இறைவனின் செம்பொருளைக் காணும்படியாகப் பிரகாசிக்கச் செய்வது தேவ ஆவியின் தூண்டுதல் எனப்படுகிறது (Inspiration). தேவ ஆவியின் தூண்டுதலால் இறைவனின் அடியார்கள் செயற்பட்டிருப்பதனைப் பழைய ஏற்பாட்டில் பரக்கக் காணலாம். "நானோ யாக்கோபுக்கு அவன் துரோகத்தையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி கர்த்தருடைய ஆவியோடு வரும் பலமும் நியாயமும் தைரியமும் நிறைந்தவன்" என்று மீகா தீர்க்கதரிசி உரைப்பதனைக் காணலாம் (மீகா 3 : 8). தமது தன்மையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி, அதனைக் காணும்படியாக மனதைப் பண்படுத்துவதும் கடவுளின் செயல்களாகவிருப்பதனால் உள்ளுந்துதலுக்கும் வெளிப்படுத்தலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதனைக் காணலாம்.

பழைய ஏற்பாட்டினை ஆர்வத்தோடு கற்கும் ஒருவருக்கு அதிற் காணப்படும் வெளிப்படுத்துதல்களும் அடியார்கள் பெற்ற உள்ளுந்துதலும் பெருவகையளிக்கும். அதனைப் படிப்பவர்களின் விசுவாசம் உறுதி பெறவும் கடவுளின் தன்மை புலப்படவும் அவை உதவி புரிகின்றன. இதனாற்றான் அத்தனாசியார் என்னும் பக்தர் "இஸ்ரவேல், கர்த்தரைப் பற்றிய அறிவினதும் மனித இனத்தின் ஆன்மீக வாழ்வினதும் தூய கல்லூரியாக விளங்குகின்றது" என்கிறார். (the sacred school of the knowledge of God and of the spiritual life of all mankind). கடவுள் தம்மை வெளிப்படுத்தினாலன்றி மக்களால் உணரப்பட முடியாதவர் என்ற எண்ணம் பழைய ஏற்பாடு முழுவதிலும் மேலோங்கி நிற்கின்றது. "இறைவன் செயற்படாதவர்", "அவரை ஒரு விவாதத்தை தொடர்ந்து நடாத்துவதனாலே கண்டு கொள்ளலாம்", என்ற அரிஸ்டோட்டில் கருத்து பழைய ஏற்பாட்டுக் கருத்திற்கு ஒவ்வாத தொன்றாகும். கடவுள் மனிதனின் எண்ணம் சிந்தனைகட்கு மேற்பட்டவரா (Transcendent) க விருப்பதால் மனிதன் அவரைக் காண்பதரிது. தனது விவேகத்தால் அவரின் திட்டங்களை அறிந்து கொள்வது அதனிலும் அரிது. மனிதன் பாவம் செய்யாதவனாக விருந்தாலும் கடவுளின் வெளிப்படுத்தலன்றி அவரைக் கண்டு கொள்ள முடியாது. ஆதாமும் ஏவாளும் பாவத்தில் அமிழ்ந்த முன்னரும் கர்த்தரே அவர்களோடு பேசினார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. கர்த்தர் மக்களினால் காணக் கூடாதவர். அத்துடன் மனிதன் பாவம் நிறைந்தவன். அவனுடைய இறையியற் சிந்தனையாற்றல் சாத்தானினால் சிதைக்கப் பட்டுவிட்டது. இந்த அடிப்படையிலேயே பழைய ஏற்பாடு கடவுளின் வெளிப்படுத்தலை எடுத்துக் கூறுகிறது.

இஸ்ரவேலரின் சமயத்திற்கு அடித்தளமாக விளங்குவது கர்த்தர் தனக்கும் ஆபிரகாமின் சந்ததிக்கும் இடையில் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையேயாகும். இந்த உடன்படிக்கையின்படி இறைவன் தன்னை இஸ்ரவேலரின் தெய்வமாக ஆக்கிக் கொள்கிறார். இஸ்ரவேலர், தன்னை எங்கள் இறைவனே யென்றும் வேண்டுதல் செய்ய அனுமதியளிக்கின்றார். தனது நாமத்தை இஸ்ரவேலருக்குப் புலப்படுத்தியமை இந்த வெளிப்பாட்டின் முக்கிய அம்சமாகும். (The Revelation of the Divine Name). ஒருவனின் நாமம் ஒருவனின் ஆளுமை முழுவதனையும் குறிக்கும். எனவே இஸ்ரவேலருக்குத் தனது நாமத்தை வெளிப்படுத்தின. இறைவன், தனது ஆற்றல், அதிகாரம், மகிமை யெல்லாவற்றையும் இஸ்ரவேலரின் நல்வாழ்வுக்கு வழங்குவதாக உறுதியளித்தார். இந்த உடன்படிக்கையின் நோக்கம் அந்த உறவைப் பூரணப்படுத்திக் கொள்வதேயாகும — இறைவன் ஆபிரகாமின் சந்ததியைப் பூரணமாக ஆசீர்வதிக்கவேண்டும்; ஆபிரகாமின் சந்ததியார் இறைவனைப் பூரணமான கீழ்ப்படிதலினாலும் வழிபாட்டினாலும் மகிமைப்படுத்த வேண்டும். இந்த உடன்படிக்கை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இறைவன் தெரிந்து கொள்ளப்பட்ட சாதியாருக்குத் தன்னைத் தொடர்ந்து வெளிப்படுத்தினார். கற்பனைகள், வாக்குத் தத்தங்கள், மீட்பின் செயல்கள் மூலமாக வெளிப்படுத்தல் ஏற்பட்டது.

உடன்படிக்கையின் தன்மையைச் சீனாய் மலையில் மேலும் தெளிவாக வெளிப்படுத்தினார். இஸ்ரவேல் மக்களை அற்புதமாக எகிப்திலிருந்து மீட்டு, தன் வல்லமையை வெளிப்படுத்திய இறைவன், சீனாய் மலையில் நீதியின் தேவனாகத் தன்னை வெளிப்படுத்தினார், பத்துக் கற்பனைகள் முதன் முதலாக இறைவனாலேயே எழுதப்பட்டது. மோசேயின் நியாயப் பிரமாணம் முழுவதும் இறைவனின் செய்கையாகவே காணப்படுகிறது. இந்த நியாயப் பிரமாணம் முழுவதும் தனது வெளிப்படுத்தலே என்று ஓசியா தீர்க்கதரிசியின் வாயிலாக உரைக்கின்றார். பாலஸ்தீனாவில் சுரண்டலும் அநியாயங்களும் ஏற்பட்டபொழுது தமது திட்டத்தைத் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்துகின்றார். "தீர்க்கதரிசிகளாகிய தம் ஊழியருக்குத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## 40 க்கு மேற்பட்ட வர்த்தகர்கள் பிடிபட்டனர்

கடந்த வாரம் 40 க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பல குற்றச்சாட்டுகளின் பேரில் பிடிபட்டனர். பொருட்களின் விலைகளைக் கூட்டி விற்றல், பொருட்களைப் பதுக்கி வைத்திருத்தல், விலைப்பட்டியலைக் காட்சிக்கு வைக்காது விடுதல் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே அவர்கள் பிடிபட்டுள்ளனராம். மேற்படி மோசடி செய்யும் வர்த்தகர்களைப் பிடிக்கப் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் பெருமளவு உதவி புரிந்ததாகவும் கூறப்படுகிறது. தற்போது நாட்டிலுள்ள 600 க்கு மேற்பட்ட பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 140 சங்கங்கள் யாழ்ப்பாணத்திலுள்ளன.

## வரவேற்புக்கு முழுக்கு

சீனாவுக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களையோ, சீனாவின் தலைவர்களையோ விமான நிலையங்களில் வைத்து வரவேற்பதில்லையென்றும், இவ்வாறு வரவேற்பதால் காலமும் நேரமும் வீணடிக்கப்படுவதாகவும் சீன அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## சமயம் கட்டாய பாடம்

முதலாம் வகுப்பு முதல் க. பொ. த. (சா. த.) பரீட்சை வரை சமயத்தை ஒரு கட்டாயமாகப் போதிப்பது குறித்துக் கல்வியமைச்சர் ஆலோசனை செய்து வருகிறார். இதற்கான திட்டத்தைக் கல்வி அமைச்சு வெள்ளையறிக்கையில் சேர்க்க விருக்கிறது.

## ஜேசுதாஸ் வருகிறார்

தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகர் K. J. ஜேசுதாஸ் இலங்கை வரவிருக்கின்றார். கதிர்காமத்திலுள்ள ஆச்சிரமமொன்றிற்கு நிதி திரட்டும் நோக்குடன் எதிர்வரும் 20-ம் திகதியும் 28-ம் திகதியும் சங்கீத நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளார்.

## இராணுவ விடுதியிலும் திருட்டு

கீரிமலை கிருஸ்ணன் கோவிலுக்கருகிலுள்ள இராணுவத்தினரின் விடுதி பூட்டப்பட்டிருந்த போது அதனை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பொருட்கள் சிலவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இது குறித்துக் காங்கேசன்துறைப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சஞ்சாய் பற்றிய புத்தகம்

விமான விபத்தில் இறந்த தனது கணவரது அரசியல் வரலாறு பற்றி அவரது மனைவியார் 200 க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை எழுதி வருகிறார். இது அடுத்த மாதமளவில் வெளியாகுமெனத் தெரியவருகிறது.

## நேரு விருது

1979-ம் ஆண்டிற்கான சங்கர், சர்வதேச சிறுவர் ஓவியப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த மகிந்தா அபயவிக்கிரமாவுக்கு நேரு விருது தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது. இப்போட்டியில் 22க்கு மேற்பட்ட நாடுகள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## வேலை நிறுத்தத் தடை நீக்கப்படும்?

அரசாங்கத்துறை ஊழியர்களின் வேலை நிறுத்தங்களுக்குத் தடை விதிப்பது என்ற அரசாங்கத்தின் திட்டம் கைவிடப்படும் என்று தெரியவருகிறது. இதன் மூலம் உத்தேச கைத்தொழில் உறவுச் சட்டமூலத்தில் வேலை நிறுத்தத்தைக் கடைசி ஆயுதமாகப் பாவிக்கலாம் என்ற சரத்துச் சேர்க்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## உப்பு ஏற்றுமதி

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து 6000 தொன் உப்பு ஆபிரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த உப்பு ஜியுவியஸ் என்னும் சிங்கப்பூர்க் கப்பலிலேயே ஏற்றப்படுகிறது. இதன் பெறுமதி 36 லட்சம் ரூபாவாகும்.

## விளக்கமறியல் கைதி மரணம்

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஊரெழு வாசியான P. கந்தையா என்பவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் காலமானார். இவர் குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்றின் மீது கடந்த 10-ம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து மரண விசாரணை நடாத்திய யாழ். பதில் நீதவான் அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

---

## பழைய ஏற்பாட்டில்........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் கர்த்தராகிய ஆண்டவர் ஒரு காரியத்தையும் செய்யார்" என்று ஆமோஸ் கூறுவதனைக் காணலாம். எனவே ஒரு வகையில் வெளிப்படுத்தல் என்பது கடவுள் தன்னைப் பற்றி மக்களுக்குக் கூறியவற்றையே குறிக்கும்.

மறுபுறமாகப் பார்க்கும் பொழுது கர்த்தர் தமது வார்த்தைகளையும் தன்னையும் வெளிப்படுத்துவதோடு அமையாது, தாமாக அவர்கள் முன் தோன்றுதலையுங் காணலாம். பழைய ஏற்பாடு வெளிப்படுத்தலைக் கடவுளின் செய்தியின் ஒலிபரப்பாக மட்டும் குறிக்கவில்லை, தனது தோற்றத்தையும் ஆள்தத்துவத்தையும் மனிதருக்குக் காட்டி அவர்களுக்குத் தரிசனம் கொடுப்பதாகவும் குறிக்கின்றது. கடவுளின் தோற்றத்தைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் பலவிடங்களிலே கூறப்பட்டுள்ளது. ஆதி 35:7-ல் யாக்கோபுவுக்குக் கடவுள் தரிசனமானது கூறப்பட்டுள்ளது. மேலும் கடவுளின் தரிசனம் பற்றி யாத் VI:3, எண் 12:6—8 ஆகிய பகுதிகளிற் எழுதப்பட்டுள்ளது. கடவுளின் தூதனாக வருபவரும் கடவுளின் தோற்றமே என்ற கருத்தும் தரப்படுகின்றது. ஆதி 16:10; யாத். 3:2; நியா.13:9—23 ஆகிய பகுதிகளில் தூதனானவரின் தூய்மை அவரே கடவுள் என்ற கருத்தைத் தொனித்து நிற்கிறது. கர்த்தர் தமது வெளிப்படுத்தலின் காரணனாகவும், ஆக்கியோனாகவும் மட்டுமன்றித் தானே அவ் வெளிபடுத்தலின் இயக்கமாகவும் செயற்பட்டிருப்பதனைக் காணலாம், பழைய ஏற்பாட்டில், ஒருவன் கடவுளின் செய்தியை எதிர்கொள்ளும்போது, அது எப்படித்தான் எதிர்பாராத தொன்றாகவும், சர்வ சாதாரணமானதொன்றாகவும் தென்பட்டாலும், அவ்வேளையில் அவன் கடவுளைச் சந்திக்கிறான் என்பதும், அவரிடமிருந்து ஒரு விசேட கட்டளையைப் பெற்றுக்கொள்கிறான் என்பதும் அனுமானிக்கற்பாலது.

---

# அடைவுகடை வேதநாயகம்

(கிறிஸ்தவ நாடகம்)

சார்ல்ஸ் டிக்கன்ஸ் எழுதிய "கிறிஸ்மஸ் கரோல்" என்ற கதையைத் தழுவியது.

(முற்றொடர்)

**இராசரத்தினம்:** (கைதட்டுதல்.)

**வேத:** கைதட்டுகிறீர்! ஆ! இன்னும் கொஞ்சம் போனால் விசில் அடிப்பீர் போலக் கிடக்குது. இன்னுமொருக்காச் சத்தம் போட்டுப் பாரும்; அதோட உம்முடைய வேலையும் சரி.

(தவராசாவைப் பார்த்து)

**வேத:** தம்பி மருமோன், நீ இப்ப நல்லாப் பேசுகிறாய். கவனம். போதகர்கள் கண்டால் பிரசங்கத்திற்கு உன்னைக் கூப்பிட்டு விட்டுவிட்டு வீவில் போயிடுவினம்.

**தவ:** கோபிக்காதேங்க மாமா. நான் வந்து உங்களை எங்கள் வீட்டிற்குக் கிறிஸ்மஸ் சாப்பாட்டிற்கு அழைப்பதற்குத் தான் வந்தேன்.

**வேத:** எனக்கு அதிலை விருப்பமில்லை; நீர் போட்டு வாரும்.

**தவ:** நீங்கள் எனக்கு ஒன்றும் தரவேண்டாம்; சாப்பிட வந்தால் போதும்.

**வேத:** என்னைச் சும்மா இருக்க விடு தம்பி. கரைச்சல் தராதை.

**தவ:** நீங்கள் கட்டாயம் வர வேண்டும் மாமா. நீங்கள் எப்போதாவது எனது மனைவியைப் பார்த்திருக்கிறீர்களா?

**வேத:** நீ கலியாணம் பண்ணிவிட்டாயா? யாரைக் கலியாணம் செய்தாய்?

**தவ:** எனக்குப் பிடித்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டேன்.

**வேத:** ஓ! அப்படியா? ஓ! கலியாணம் பண்ணினவன் எல்லாம் ஏன் செய்தம் என்று கவலைப்படுகிறான். அதைச் செய்யாதவன் எப்ப செய்வம் என்று ஏங்குகிறான். கரப்புக்க இருக்கிற கோழிக் குஞ்சில இரண்டு வெளியால வந்தால், வெளியால வந்தது உள்ளுக்க போகப் பார்க்கும். உள்ளுக்க நிற்கிறது வெளியில வரப் பார்க்கும் இதுதான் தம்பி தத்துவம். சரி தம்பி, நேரத்தை மினக்கெடுத்தாதை போட்டு வாரும்.

**தவ:** அப்ப வாறியளோ வரவில்லையோ?

**வேத:** வரவில்லையென்னுறன், பிறகும் பார்!

**தவ:** சரி மாமா! நான் போகிறேன். ஆனால் என்னிடத்திலுள்ள கிறிஸ்மஸ் உணர்ச்சியை உங்களால் துரத்திவிடவோ விரட்டியடித்து விடவோ முடியாது. Merry Christmas.

**வேத:** உம்......உம்.

**தவ:** Happy Christmas.

**வேத:** உம்......உம்.

**தவ:** (இராசரத்தினத்தைப் பார்த்து) Happy Christmas.

**இரா:** (பயந்தபடி) Same to you.

(கதவில் ஒருவர் தட்டுதல்)...
(நன்கொடை சேகரிப்பவர்).

**வேத:** யாரது?

**ந. சே:** அது நான்.

**வேத:** நான் என்றால்?

**ந. சே:** நான்தான்.

**வேத:** பெயரென்ன?

**ந. சே:** நான்தான்.

**வேத:** சரி "நான்தான்" உள்ளே வா.

**ந. சே:** நாடு முழுவதும் வறுமையாயிருக்கு. எங்க பார்த்தாலும் பஞ்சம், பசி, பட்டினி வாட்டி வதைக்குது. விலைவாசியெல்லாம் மலை போல ஏறுது. ஜனங்களெல்லாம் நல்லாய்க் கஷ்டப்படுகுது. அதுதான் நான் இப்படியான சந்தோஷமான நாளிலே கொஞ்சம் பணம் சேர்த்து ஏழை எளியதுகளை மகிழ்விக்கலாம் என்று எண்ணுகிறேன்.

**வேத:** இவர்களை மாத்திரம் சிறையில போடுறாங்களில்லை. சும்மா கண்டவங்களையெல்லாம் போட்டு வாட்டுறாங்கள். ஏன் பாரும், ஏழை எளியதுகளுக்கு அனாதைப் பள்ளிக்கூடங்கள், மடங்கள் இல்லையா? எல்லாம் மூடியாச்சா?

**ந. சே:** அவைகளெல்லாம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. (பேனாவைத் திறந்தபடி).

என்ன 500 என்று போடவா அல்லது 1000 என்று போடவா?

**வேத:** ஒன்றும் போட வேண்டாம். இப்ப உமக்குத்தான் போட வேண்டும் போல இருக்கு.

**ந. சே:** ஓகோ! உங்களுக்குப் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க விருப்பமில்லை போலும். அப்படியல்லோ இருக்க வேண்டும்? அதெல்லோ கொடை? தருமம் என்றால் வலக்கை கொடுக்கிறதை இடக்கை அறியப்படாதாம். இதென்னென்றால் 25 ரூபா கொடுத்துவிட்டு பேப்பரிலே தன்ர படத்தையும் போட்டுவிட்டு 25 ரூபா கொடுத்தேன் என்று அறிவிக்குதுகள்.

**வேத:** சும்மா ஒரு பேப்பரையும் கொண்டு காசு சேர்ப்பதை விட்டுவிட்டு பழம் பேப்பரை சேர்த்து அனுப்பி காசு சேரும், போம். இஞ்ச நீர் நின்று அலட்டப் போகிறீரோ? என்னை சும்மா விடமாட்டீரா? நான் கிறிஸ்மஸ் கொண்டாடுவதில்லை. அனாதை இல்லங்களுக்கும் வயோதிப மடத்துக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறேன். வேண்டுமென்றால் ஏழை எளியவர்களை அங்கே போகச் சொல்லும்.

(தொடரும்)

EDITORIAL

## Higher Education In Travail

According to a recent news report, the Supreme Court has allowed C. K. Seneviratne, of Nugegoda, a student at Royal College, Colombo to proceed with his application, challenging the University Grants Commission, on the validity of the district basis of admission to the University (i. e. 55 per cent of those who qualify).

The subdivision of the Colombo District, effected after the conduct of the AL Examination of 1978 and the consequential lowering of the quota of university admissions for one section of the city is, we note, the subject of another appeal by a candidate "a victim of circumstances" who claims that she was eligible for the medical faculty and not the Dental as she sat the AL examination before the subdivision was made.

Ruwini Perera had earlier challenged the UGC in the Supreme Court on *the ratio basis* of admission, as between those who qualified for the medical course, at the two AL Examinations of April and August 1979 and had obtained a verdict in her favour.

The only basis of admission in the UGC Scheme which is yet to go before the Supreme Court is the 15 per cent admission of students from underprivileged areas.

While the courts are tending to be clogged with appeals from students qualified for University admissions, a farcical turn has been given to the whole subject of University Entrance, by a news report that 118 answer scripts of the April Examination held this year, have been found in a bakery at *Walala Menikhinna* in Wattegama.

Following the detection of these scripts, the Wattegama Police are reported to be combing the area for any other bakeries or tea boutiques which may have received AL answer scripts bought over perhaps from a local old paper seller.

In this context, we recollect the furore over the alleged over-marking of some answer scripts of Tamil candidates early last year, when some of these scripts seem to have found their way into the hands of some leading politicians in the country. The furore died down as quickly as it was raised.

We shall leave to the police the investigations into the AL answer scripts which have gone astray from lawful custody. A full and impartial investigation is necessary to restore the confidence of the youth and the parents in the conduct of an examination which more than any other phenomenon in the country, is the cause of frayed nerves and mounting tension every year.

Coming to our main subject, of the law in relation to University Admissions, Professor G. L. Peiris, delivering a talk at the Marga Institute on *Fundamental Rights and University Admission* has propounded the theory that injustice consists not only of "*the unequal treatment of equals but of the equal treatment of unequals*".

According to Professor Peiris, the Ruwini Perera Vs. UGC judgment, has unmistakably underscored the truth that the concept of equality before the law does not require the invariable standard of *uniformity of treatment*. The Professor has pointed out that the Court has held, at some point in the judgment, that discrimination is at times essential in the public interest. It was the rigidity in the application of the Ratio Scheme that the Court disallowed, according to Prof. Peiris, and not the principle of discrimination.

We are yet to know the judgment on the Seneviratne Vs. UGC case. Whatever the judgment in the case may be, it is evident that we are living through a time when subjective considerations seem to acquire more weightage than an objective approach to our national issues.

Professor Peiris concluding his talk on "Fundamental Rights and University Admissions", tranquilises his uneasy conscience by his comment that the implementation of "a differentia" need not cause undue hardship "*so long as the aims underlying the differentia do not inhibit fair dealing by the State*" with the different groups involved.

In our view, "aims underlying the differentia", "fair dealing by the State" are the *very* issues that lie at the root of the gripes in this country over admissions to the University.

No one has, at least so far, questioned the 15 per cent "differentia" proposed by the UGC for admission of students from "underprivileged areas" to the University. This is a pointer to a healthy national outlook on higher education.

But, any sustained tinkering with fair play and justice, will tend to cast shadows of doubt on the 'aims underlying the differentia' and certainly in turn inhibit 'fair dealing' by the State.

We should admit, in the final analysis, that there may be many sides to a question but *not* as many answers.

*HOME CALL*

### Rev. Fr. Xavier S. Thaninayagam

We regret to record the death of Father Thaninayagam, the reputed Tamil Scholar at his residence at Pandaiterruppu on 3-9-80 at the age of 66.

He was chosen by the *Thanthai Selva Memorial Trust* to deliver the *first* in the series of the Chelvanayakam Memorial Lectures in April this year. He delivered two lectures on April 27 and 28, 1980 at Veerasingham Hall.

He also delivered the Sornammah Endowment lectures at the University of Madras (1960) and at the Annamalai University (1961) and also the Bunker Memorial Lectures in 1972.

He was also the Founder and Chief Editor of the prestigious *Tamil Culture* (1952—1967) and Joint Secretary General of the International Association of Tamil Research.

He was the chief Organiser of the first IATR Conference held at Kuala Lumpur.

The Funeral took place at St. Mary's Cathedral, Jaffna on 4-9-80.

## Methodists Appeal to the President

A Resolution was passed at the Annual Conference of the Methodist Church which met at Kollupitiya on 28-8-80 requesting the President of the Republic of Sri Lanka to set up some machinery to negotiate with the Trade Unions now in strike with a view to re-employing those deprived of their means of livelihood both in the public and private sectors.

This would be, stated the Resolution, compatible with the aims and ideals of the Dharmista Society.

## Y's Men's Club of Manipay

The William Mather Memorial Church was the venue of the Chartering of the Y's Men's Club of Manipay, the service Club of the Y.M.C.A. on 23 8-80. The Chief Guest at the ceremony was Mr. V. R, Amarasingam, Past President of the Y's Men's Club of Jaffna, which sponsored the Manipay Club.

Many Officials of the Y's Men's International (Sri Lanka Region) including its Regional Director, Mr. Gladstone Thevathasan and representives from Brother Clubs of Colombo. Wellawatte. Moratuwa, Batticaloa and Jaffna attended the Ceremony. The Induction of the Members was done by Mr. Lanka Nesiah, Regional Secretary and Mr. T. J. Rajaratnam, President of the Jaffna Club, while the Installation of the Office Bearers was done by Mr. Wimsy Sinnathamby, past Regional Director and Mr. Darrel Perera, Regional Director Elect.

The ceremony ended with a Dinner. The following are the Office Bearers of the new Y's Men's Club of Manipay:— *President*: Mr. C. Arulsuthan, *Secretary and Treasurer*: Mr. J. Lyman, *Vice-Presidents*: Mr. V. Sunthararadas and Mrs. J. R. Mills, *Asst. Secy:* Mr. T. P. Kuddithamby, *Related Secy:* Mr. W. G. Annappah, *Committee Members*: Messrs W. J. J. Mather, B. A. Jebarajan and W. R. M. Mather.

## Colombo Church News

*Felicitation to Worker*

The Colombo Church of the JDCSI felicitated Rev. T. S. Premarajah on 4-8-80 on his ordination to the priesthood at the Cathedral Church, Vaddukoddai on 2-8-80.

Mrs- Leela Emerson, Mr. Joshua Navaratnam and Mr. Thomas Thavarajah conveyed to the new Presbyter the greetings and wishes of the Church.

The Rev. S. S. Arulampalam, the Presbyter of the Colombo Church said that Rev. Premarajah has the distinction of being the FIRST in three fields—the FIRST to become a Minister of the Church from Delft, the FIRST to have served in the Colombo Church for three years as Assistant Pastor and the FIRST to have received his ordination as a bachelor.

*Au Revoir*

On the 30th of August, the newly ordained Presbyter, Rev. T. S. Premarajah was accorded a FAREWELL by the members of the Parish on his transfer to Jaffna to take charge of the Church at Karainagar.

A special song composed for the occasion by Mr. A. Ramanathan, was sung by a group of children. Messrs. A. C. J. Eliezar, V. Navaratnam and Mrs. R. S. Nadarajah spoke in appreciation of the work, done in their midst, by the Assistant Pastor for the last three years.

A Presentation on behalf of the Church was made by Mrs. Athysayam Asbury.

The Rev. T. S. Premarajah in his reply thanked the church members for their kind words and gesture of good will. He had a special word of gratitude to Rev. S. S. Arulampalam under whom he had served a very fruitful period of apprenticeship in Colombo.

## Bicycle Components Manufacturing Industry

A large Indian Bicycle manufacturing concern — *Pers India PVT Ltd.* will soon set up a Bicycle Components Manufacturing Industry outside the FTZ to supply components to the bicycle Industry within the FTZ which would produce 100,000 bicycles a year mainly for export to U. S.

The Indian firm will also supply a percentage for the local market. While the Bicycle Industry within the FTZ can provide employment to only 300 — 400 persons, the Components' Industry outside the FTZ, it is estimated, can provide employment to about 1000 persons.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philp Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 5th September, 1980.